யாழ்ப்பாணம்

Registered as a Newspaper　பக்கங்கள் 04　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　மக்கள் தினசரி　Peoples Daily

நாதம் 04　திருவள்ளுவர் ஆண்டு 2024　கார்த்திகை 24　( 09-12-93 )　வியாழக்கிழமை　ஓசை 294

## பூநகரி கூட்டுத்தளம் அழிப்பு வெற்றிநாளுக்கு ஏற்பாடு

பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத் தளத்தை தாக்கி அழித்து வெற்றிகொண்டதை ஒட்டி வெற்றிநாள்களாக எதிர்வரும் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ் வெற்றி நாள்களுக்கான ஏற்பாடுகள் இப்பொழுது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் வெற்றி நாள்களை பறைசாற்றும் வகையிலான பதாகைகள் வாகனங்களிலும், வீதிகளுக்கு குறுக்கேயும் கட்டப்பட்டுள்ளன. இதனையொட்டி இம்மூன்று நாட்களிலும் யாழ் குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய கோட்டங்களில் பல நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டு வருகின்றன. மேலும் ஊர்தி பவனியும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

# இராணுவத் தளபதியுடன் மேலும் சில வடபகுதி தளபதிகள் பதவி விலகலாம்!

## இராணுவ நீதிமன்றத்தின் முன்னால் விசாரணைக்கும் நிறுத்தப்படுவர்

(கொழும்பு)

பூநகரி தோல்வியை அடுத்து பதவி விலகும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னாவுடன், வடபகுதியில் கடமையாற்றி வரும் மேலும் இரு சிரேஷ்ட இராணுவ உயர் அதிகாரிகள் தமது பதவிகளிலிருந்து விலகிக்கொள்ள இருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இவர்கள் இவ்வருட இறுதியுடன் பதவியை ராஜினாமா செய்வார்கள் எனவும் தோல்விக்கு காரணம் என குற்றம் சாட்டப்பட்டு இவர்கள் இராணுவ நீதிமன்றம் முன் நிறுத்தப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரித் தாக்குதல் நடந்த சமயத்தில் வடபகுதி இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் றோகான் தளுவத்தை, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் ஜாலியநம்முனி, ஊர்காவற்றுறை மற்றும் பூநகரி முகாமிற்கு பொறுப்பாயிருந்த கேணல் சாந்த றோட்டகொடவும் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் எனவும் இவர்களில் இருவரே பதவி விலக தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னாவின் ராஜினாமா இம்மாதம் நடுப்பகுதியில் ஏற்கப்படலாம் அல்லது அவர் கட்டாய லீவில் அனுப்பப்படலாம் எனவும் அப்பத்திரிகை மேலும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தளபதியாக ஜெரி ஜனவரி 1இல் பதவி ஏற்பார்!

### லெப்.ஜெனரலாக பதவி உயர்வு

(கொழும்பு)

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவார் என கொழும்புப்பத்தி அதில்குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில்இரண்டாம் பிரிவுத் தளபதியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம சிறிலங்கா இராணுவ ஆளணி முதல்வராக அடுத்த மாதம்

## 'பாதுகாப்பு' படையினருக்கு அரசு சரியான தலைமை வழங்கவில்லை

### கண்டித்து சிறிமாவோ தொடர் கூட்டங்கள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்திற்கு எதிரான போரில் அரசு பாதுகாப்பு படைகளுக்கு சரியான தலைமையை வழங்கவில்லை என சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோ பண்டார நாயக்கா குற்றஞ் சாட்டியுள்ளார். இனப்பிரச்சினைக்குவிரைந்து தீர்வு காணுமாறு வலியுறுத்தி தமது கட்சி அடுத்த வாரம் முதல் தொடரான கூட்டங்களை நடாத்தப் போவதாகவும் அவர் நேற்று அறிவித்தார்.

ஜனாதிபதி விஜேதுங்க புலிகளால் விடுக்கப்படும் 'பயங்கரவாத' மிரட்டலை ஒடுக்க தவறிவிட்டார். இனப் பிரச்சினைக்கு விஜேதுங்கவிடம் அரசியல் தீர்வு ஏதும் இல்லை எனவும்சிறிமாவோ பண்டார நாயக்கா தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் 10 வருடமாக நடக்கும் போர் பல உயிர்களைபலியெடுக்கின்றது மக்களிடையே போர் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து வதற்காக பல பேரணிகள் நடத்தவுள்ளதாக அவர் கூறினார்- கடந்த மாதம் பூநகரியில் பல நூற்றுக் கணக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## போர்குறித்து படையினர் விரக்தி அடைந்துவிட்டனர்

### சந்திரிகா குமாரணதுங்கா

(கொழும்பு)

கடந்த 10வருடங்களாக நீடித்துவரும் போர் குறித்து படையினர் விரக்தியடைந்துவிட்டதாக மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார். தமது மாகாண சபை எல்லைக்குட்பட்ட படையினரிடம் கேட்டால் தயவுசெய்து இப்போரை

இதேவேளை ''யுத்தம்நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் யுத்தத்தை நடத்தவேண்டாம் என அரசாங்கத்திடமோ அல்லது இராணுவத்தினரிடமோ கூற மாட்டோம். ஆனால் இதே வேளை விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய அமைப்புகளும் ஏற்கும் அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்பட

## வடக்கு-கிழக்கில் போரிட இராணுவத்திற்கு விசேட பயிற்சி

தியரெட்னாவுடன், வடபகுதியில் கடமையாற்றி வரும் மேலும் இரு சிரேஷ்ட இராணுவ உயர் அதிகாரிகள் தமது பதவிகளிலிருந்து விலகிக்கொள்ள இருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இவர்கள் இவ்வருட இறுதியுடன் பதவியை ராஜினாமா செய்வார்கள் எனவும் தோல்விக்கு காரணம் என குற்றம் சாட்டப்பட்டு இவர்கள் இராணுவ நீதிமன்றம் முன் நிறுத்தப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரித் தாக்குதல் நடந்த சமயத்தில் வடபகுதி இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் றோகான் தலுவத்தை, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் ஜாலியநம்முனி, ஊர்காவற்றுறை மற்றும் பூநகரி முகாமிற்கு பொறுப்பாயிருந்த கேணல் சாந்த றோட்டகொடவும் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் எனவும் இவர்களில் இருவரே பதவி விலக தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னாவின் ராஜினாமா இம்மாதம் நடுப்பகுதியில் ஏற்கப்படலாம் அல்லது அவர் கட்டாய லீவில் அனுப்பப்படலாம் எனவும் அப்பத்திரிகை மேலும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவத்தளபதியாக ஜெரி ஜனவரி 1இல் பதவி ஏற்பார்!

## லெப்.ஜெனரலாக பதவி உயர்வு

(கொழும்பு)

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவார் என கொழும்புப்பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா லெப்டினட் ஜெனரல் தரத்திற்கு உயர்த்தப்பட்டு இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவார் எனவும் அதில்குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இரண்டாம் பிரிவுத் தளபதியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம சிறிலங்கா இராணுவ ஆளணி முதல்வராக அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பதவி உயர்த்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுவதாக அப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிசில் வைத்தியரட்னாவிற்கு இத்தாலிய தூதுவர் பதவி!

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து விலகிச் செல்லும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னாவை இத்தாலிக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்க அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. இது விடயத்தில் தளபதியின் பதில் அரசாங்கத்திற்கு இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை என்று செவ்வாய்க் கிழமை ஐலன்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரட்னாவினால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க ஏற்றுள்ளார் என்றும் இதன் பின்னரே அரசாங்கம் இம் முடிவிற்கு வந்தது என்றும் அப் பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராணுவ தளபதியின் இராஜினாமா;

# ஜனாதிபதி விஜேதுங்க அவசர மாநாடு கூட்டினார்

(கொழும்பு)

இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரட்ணாவின்இராஜினாமா கடிதம்ஜனாதிபதிக்கு கிடைத்ததை தொடர்ந்து உடனடியாக அவசர மாநாடொன்றை ஜனாதிபதி கூட்டியதாக தெரியவருகின்றது.

ஜனாதிபதி செயலகத்தில் மேற்படி மாநாடு நடைபெற்றதாகவும் இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், வேறு சிவில் உயர் அதிகாரிகளும், இராணுவ உயர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் கடற்படை மேலாதிக்கம் மீண்டும் ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

வடபகுதி கடலில் மீண்டும் சிறிலங்கா கடற்படையின் மேலாதிக்கத்தை ஏற்படுத்தவும் இராணுவக் கவசப்படையினை அபிவிருத்தி செய்யவும் தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் வடபகுதியில் நடந்த போர்களில் கவசப்படை இழந்த டாங்கிகள், கவச வாகனங்களுக்கு ஈடாக புதிய கவசப்போர் வாகனங்களை புதிதாக கொள்வனவு செய்யவேண்டியிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை காரணமாக அடுத்த வருடத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக அரசு மேலும் நிதியை ஒதுக்கீடு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியது.

# வடக்கு-கிழக்கில் போரிட இராணுவத்திற்கு விசேட பயிற்சி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதியில் போரிடுவதற்கென சேர்த்துக் கொள்ளப்படவிருக்கும் இராணுவத்தினரில் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தாயிரம்பேருக்கு விசேட யுத்தப்பயிற்சி வழங்கப்படவிருக்கிறது.

இம் மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் யுத்தப் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் புதிதாக இராணுவச் சேவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார் என 'லங்கா தீப சிங்களப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தப் பயிற்சிகளை பூரணமாக முடித்துக்கொள்ளாத இராணுவத்தினரை வடக்கு-கிழக்கு பகுதிக்கு அனுப்பி வைத்தமையால் கடந்த காலத்தில் எழுந்த பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக மீண்டும் படையணிகள் பூநகரி முகாமிற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காதது தொடர்பாக இராணுவத்தின் உயர்மட்டம் அரசிடம் எச்சரிக்கை விடுத்ததாகவும் தெரியவந்துள்ளது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை மறு அறிவித்தல்வரை தொடர்ந்து வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

# புலிகளின் தாக்குதலுக்கு ஒரு ராணுவ சிப்பாய் பலி

## புல்மோட்டையில் சம்பவம்

(கொழும்பு)

புல்மோட்டை கெப்பிட்ட கொல்லாவ பாதையில் ரோந்து சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 4-ம் திகதி இடம்பெற்றது என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## வினாத்தாள்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்கான இரண்டாம் தொகுதி வினாத்தாள்கள் நேற்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## உருவப்படம் உள்ளே

பூநகரி-நாகதேவன்துறை கூட்டுத்தளம்மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த கடற்புலிகளின் மகளிர்பிரிவுத் துணைப் பொறுப்பாளர் லெப் கேணல் கோதை (பாமா) யின் உருவப்படம் உள்ளே...

விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்திற்கு எதிரான போரில் அரசு பாதுகாப்பு படைகளுக்கு சரியான தலைமையை வழங்கவில்லை என சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோ பண்டார நாயக்கா குற்றஞ் சாட்டியுள்ளார். இனப்பிரச்சினைக்குவிரைந்து தீர்வு காணுமாறு வலியுறுத்தி தமது கட்சி அடுத்த வாரம் முதல் தொடரான கூட்டங்களை நடாத்தப் போவதாகவும் அவர் நேற்று அறிவித்தார்.

ஜனாதிபதி விஜேதுங்க புலிகளால் விடுக்கப்படும் 'பயங்கரவாத'...

பிரச்சினைக்கு விஜேதுங்கவிடம் அரசியல் தீர்வு ஏதும் இல்லை எனவும்சிறிமாவோ பண்டார நாயக்கா தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் 10 வருடமாக நடக்கும் போர் பல விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து வதற்காக பல பேரணிகள் நடத்தவுள்ளதாக அவர் கூறினார்- கடந்த மாதம் பூநகரியில் பல நூற்றுக் கணக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# போர்குறித்து படையினர் விரக்தி அடைந்துவிட்டனர்

## சந்திரிகா குமாரணதுங்கா

(கொழும்பு)

கடந்த 10வருடங்களாக நீடித்துவரும் போர் குறித்து படையினர் விரக்தியடைந்துவிட்டதாக மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார். தமது மாகாண சபை எல்லைக்குட்பட்ட படையினரிடம் கேட்டால் தயவுசெய்து இப்போரை முடிவுக்கு கொண்டுவாருங்கள் என அவர்கள் கூறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தையும் போரையும் மக்கள் வெறுப்பதாகவும் இதுவரை 10,000 படையினர் வரை இராணுவத்தைவிட்டு விலகியதையும் சந்திரிகா குமாரணதுங்க சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ''யுத்தம்நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் யுத்தத்தை நடத்தவேண்டாம் என அரசாங்கத்திடமோ அல்லது இராணுவத்தினரிடமோ கூற மாட்டோம். ஆனால் இதே வேளை விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய அமைப்புகளும் ஏற்கும் அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும்'' என மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க 'சந்தேசிய' வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கு தயாராக இருக்கையில் புலிகள், தமிழ் மககள் உட்பட அனைவரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இரவு நேர எறிகணை வீச்சு பாதுகாப்பு வலயத்துள்ளும் வீழ்ந்தது

## மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்தும் மண்டைதீவிலிருந்தும் யாழ் நகர் மற்றும் கோண்டாவில் பகுதிகளை நோக்கி நேற்றிரவு சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத்தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் ஒன்று பாதுகாப்பு வலயத்துள் வீழ்ந்து வெடித்தது.

இரவு 8.30 மணியளவில் மேற்படி பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட சுமார் மூன்றிற்கு மேற்பட்ட எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதில் மூவர் படுகாயமடைந்தனர் சிலவீடுகள் சேதமடைந்தன.

இதில் முதலாவதாக ஏவப்பட்ட எறிகணை கோண்டாவில் புகையிரத நிலையப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின்முற்றத்தில் வீழ்ந்து வெடித்தது. இதனால் அவ் வீட்டில் பரீட்சைக்காக படித்துக்கொண்டிருந்த எஸ்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# க. பொ. த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின்பெறுபேறுகள் நேற்று யாழ் கல்வித் திணைக்களம் எடுத்து வரப்பட்டது.

இப் பெறுபேறுகள் உடன் நேற்றே யாழ். கல்வித் திணைக்களத்தினால் அனேகமான பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன. இதுவரை பெற்றுக்கொள்ளாதோர் யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். தனிப்பட்ட பரீட்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரக்கட்சியின் செயற்பாடு வஞ்சகத்தனமானதொன்று

(கொழும்பு)

யுத்தத்தை நடத்திக் கொண்டு செல்லுமாறு கூறிக் கொண்டு அரசியல் தீர்வை நாடுமாறு பணிப்பது ஒருவஞ்சகமான செயல் என்றும் இதற்கு தனது கட்சி என்றும் உடந்தையாக செயல்படபோவதில்லை எனவும் நவ சமசமாஜ கட்சி தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி யுத்தத்தை நடாத்தி கொண்டு அரசியல் தீர்வை நாடுமாறு கூறி ஆரம்பிக்கப்படவுள்ள திட்டங்கள் மக்கள் மத்தியில் புதிய ஓர் வேடத்தை சுதந்திரக் கட்சி எடுத்திருப்பதையே காட்டுகிறது.

எனவே வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு ஒன்றில் யுத்த தீர்வு அல்லது அரசியல் தீர்வு இவை இரண்டில் ஒன்றே இருக்க வேண்டுமே தவிர இரண்டையும் ஒரே நேரத்தில் அமுல்படுத்துவது என்பது ஓர் கற்பனை விடயம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### வீடு தேவை

பயிற்சி நிலையமாகப் பாவிப்பதற்குசந்த வீடு, வதிரிச் சந்திக்சருகாமையில் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி, கரவெட்டி.
(6809)

### நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி நோய்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் உள்ள குடத்தனை, அம்பன் கிராமப்பகுதிகளில் உள்ள நெல்வயல்களில்மடிச்சுக்கட்டி நோய் ஏற்பட்டு நெற்பயிர்கள் பாதிப்படையும் நிலை உருவாகியுள்ளது (25)

### சங்காபிஷேகம்

நவாலி வடக்கு விசாலாட்சி சமேத விசுவநாத பெருமான் ஆலயத்தில் எதிர் வரும் திங்கட்கிழமையன்று கார்த்திகை மாதத்தின் கடைசிக் சோமவாரத்தை முன்னிட்டு நவாத்திர சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. அதைத்தொடர்ந்து நியாய பூர்வ பஞ்சமுகார்ச்சனையும் நடைபெற்று சுவாமி வீதி வலம் வந்தலும இடம் பெறவுளது

### மரம் நடுகை

(பருத்தித்துறை)

வடமராட்சிகிழக்கு பொது விளையாட்டு மைதானச் சூழலில் அம்பன் கிராம அபிவிருத்திச் சங்கம் மரம் நாட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இப்பகுதிளில் மலை வேம்பு சவுக்கு மரமுந்திரிகை மரங்கள் நாட்டப்படடு அழகுபடுத்தப்பட்டுள்ளன. (25)

### முதலிடம் பெற்றது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு பாலர் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட உடற்பயிற்சி நிகழ்ச்சிகளில் சக்கோட்டை பாலர் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இன்பருட்டி பாலர் பாடசாலை இரண்டாம் இடத்தையும் பொலிகண்டி பாலர் பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெறுககொண்டன.
(25)

### கல்வி டிப்ளோமா விரிவுரைகள்

தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கல்வி நெறியைச் சேர்ந்த யாழ் மாவட்ட,

## 31-ம் நாள் நினைவலைகள்

தாயின் மடியில்
தாளையடியில்:
29
—
03
—
1976



தாயக மீட்பில்
பூநகரியில்:
11
—
11
—
1993

**லெப்டினனட் சுடரொளி (சிம்மான்)**
**(ஜீவரட்ணம் ஜெகதீபன் (றொனி))**


வீரத்தின் விளைநிலமாய் விளங்கி நிற்கும்
வீசும்புகழ் தாளையடி ஈந்த செம்மல்
தீரத்தால் தினவெடுத்த தோள்கள் விம்ம
தீந்தமிழர் தாயகத்தில் திளைத்து ஓங்க
கூரம்பாய் சீறிவரும் குரோதி வென்று
குறியாக மண்மீட்புப் போரில் தோய்ந்த
ஆரமுதே! ஜெகதீபா! உந்தன் வீரம்
அவனியிலே என்றென்றும் வாழு மையா!

11 - 12 - 1993 சனிக்கிழமை காலை 7. 00 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் இவரின் ஆத்ம சாந்திக்காக இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவுத் துயரால் பெருநோயுறும்

தாளையடி அப்பா, அம்மா, சகோதரிகள்
09 - 12 - 1993 உற்றார், உறவினர்கள்
(6802)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் சின்னத்தம்பி பராபரன்**

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் அவர்கள் அறிவுறுத்தலின் பிரகாரம் 1967 / 1968 கால போக நெற்செய்கை விவசாயக் கடன் தொடக்கம் 1978 சிறுபோக நெற்செய்கை கடன்வரை சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தில் பெற்ற கடனாளிகள மீதியாகவுள்ள கடன்தொகையை 31. 03 94க்கு முன் முழுதாக செலுத்தினால் எவ்வித வட்டியும் அறவிடப்படமாட்டாது. ஆகவே கடன் மீதியாக செலுத்த வேண்டியவர்கள் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொண்டு 31. 03. 94க்கு முன் கடனை மட்டும் செலுத்தவும் செலுத்தும் பட்சத்தில் வருங்காலத்தில் வழங்கப்படும் விவசாயக் கடன்களை பெற உரித்துடையவர்களாகிறீர்கள் என்பதை சங்க பொது முகாமையாளர் அறியத்தருகின்றார்.

பொது முகாமையாளர்
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

(சி-8083)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை அன்ரன்**
**(தியாகராஜா மன்மதராஜா)**

பிறப்பு 12-08-1967
வீரச்சாவு 09-12-1987

ஆண்டு ஆறு ஆனதைய்யா
ஆனால் ஆறவில்லை எம் நெஞ்சமைய்யா
விடுதலைக்காய் நீ சென்றிட்டாய்
ஆனால் உன் நினைவு நீங்கவில்லை ஐயா.

உன் நினைவால் துயருறும்
பெற்றோர், அண்ணன்மார்,
அக்காமார், தம்பி, தங்கை,
அண்ணி, அத்தான்மார்,
பெறாமக்கள், மருமக்கள்.

மன்மதராஜா வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(6775)

## வேலை நிறுத்தம் முடிவுற்றது

அப்புத்தளை நீட்வூட் டிவிசன் தொழிலாளர்கள் கடந்த 226 நாட்களாக நடத்தி வந்த வேலை நிறுத்தப் போராட்டம் டிசம்பர் முதல் திகதியுடன் முடிவுச்கு வந்துள்ளது.

சம்பள உயர்வுகோரி கடந்த ஏப்ரல் 17-ம் திகதி முதல்இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு வந்தது தெரிந்ததே.

## 4-ம் ஆண்டுநினைவலைகள்



செல்வி
**தேவசாந்தி சங்கரப்பிள்ளை (சாந்தி)**

மலர்வு 02 02-1969
அழிப்பு 09-12-1989

முந்தித் தவமிருந்து முந்நூறு நாட்சுமந்து
ஏந்தி வளர்த்த ''தேவசாந்தி'' குலவிளக்கே
அழகான மதிவதனம் அன்பான உன்செயல்கள்
பழகிப் பதிந்தெங்கள் இல்லம் நிறைந்ததம்மா
உன்பாச நினைவுகளை ஊரறியச் சுமந்தின்று
பொன்னான நாலாண்டு மின்னாக மறைந்ததம்மா
கண்ணணைய சாந்தியுந்தன் கள்ளமற்றஉள்ளமெமைக்
கொள்ளை கொண்டு இதயத்தைஇடியாய்இடிக்குதம்மா
நெஞ்சத்து நினைவலையில் நீ நிறைந்து நிற்கின்றாய்
நீண்டதுயர் ஆறவில்லை உன் நினைவும் மாறவில்லை
இதயத்துள் ஒளியாகி அணையாது ஒளிர்கின்றாய்
எமதிடரைக் கரும்பாக்கி மகிழ்வென்றும் தந்திடுவாய்
மனவுணர்வைக் கல்லாக்கி மலைபோன்ற கவலைகளை
மௌனமாய்ச் சமாளிப்போம் சாந்தி! நீ சாந்திபெறு

உற்றார், உறவினர்
கைதடி மேற்கு. (சி-8067) குடும்பத்தினர்

பட்டு அழகு படுத்தப்பட்டுள்ளன. (25)

## முதலிடம் பெற்றது
(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு பாலர் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட உடற்பயிற்சி நிகழ்ச்சிகளில் சக்கோட்டை பாலர் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இன்பருட்டி பாலர் பாடசாலை இரண்டாம் இடத்தையும் பொலிகண்டி பாலர் பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (25)

## கல்வி டிப்ளோமா விரிவுரைகள்

தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கல்வி நெறியைச் சேர்ந்த யாழ் மாவட்ட, யாழ் இந்து மகளிர் கல்லூரி நிலைய முதலாம் இரண்டாம் வருட மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்-இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென நிலைய சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவிக்கின்றார்.

## கருத்தரங்கு

சமூக விஞ்ஞான மன்றத்தின் அனுசரணையுடன் இன்று 09-12-93 பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை மண்டபத்தில் பேராசிரியர் N பாலகிருஷ்ணன் அவர்களால் ''திறந்த பொருளாதாரமும் அதன் அபிவிருத்தியும்'' என்ற தலைப்பின்கீழ் கருத்துரை வழங்கப்படவுள்ளது.


## வீதிப் பெயர் சூட்டல்

புலோலி மத்தியிலுள்ள காந்தி வீதிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க மாவீரர் 2-ம் லெப்டினன்ட் சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக ''சண்முகநாதன் வீதி'' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. (25)

## கலந்துரையாடல்

சமூக சேவைபகுதியிலிருந்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வருமதி தொடர்பாக சமூக சேவை பணிப்பாளர் அனுப்பிய கடிதம் குறித்து ஆராய இன்று வியாழக்கிழமை கலந்துரையாடல் ஒன்று நடைபெற உள்ளது

முற்பகல் 10.00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் வை. செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் சகல ப.நோ.கூ. சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.



## செல்வன் சின்னத்தம்பி பராபரன்

(பேராதனைப் பல்கலைக் கழகம், பொறியியல் பீடம்)

அன்னையின் மடியில் — அநியாய அழிப்பில்

09 08-1965 — 09-12-1988

நம் இதயங்களில் நிலையாக வீற்றிருக்கும் இதயத் தெய்வம் ''பராபரன்'' ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்,

தந்தை கலாநிதி ஆ. சின்னத்தம்பி
தாய் ஆசிரியை பா. சின்னத்தம்பி
சகோதரர்கள் அன்பரசன், சிவசேயோன்
நிமலன், சிவமதி

கரவையூரான் கலாநிதி ஆ. சின்னத்தம்பி
(முன்னாள் ஆங்கிலக் கல்வி அதிகாரி)
கல்வியங்காடு. (6806)

## 31-ம்நாள் நினைவஞ்சலி



விழிப்பு
05-10-1922

உறக்கம்
09-11-1993

### அமரர் சின்னத்துரை வடிவேலு
(கோயிலார்)

(உணவத்தைக் கண்ணகை அம்மன்கோயில் தர்மகர்த்தா)

ஆருயிர் தந்தையே அன்புத் தெய்வமே அணையா விளக்கே
எம்மை நல்லவழியில் வாழ ஆளாக்கிய தெய்வமே மாதம் ஒன்று
ஆனாலும் உங்களை எம் நெஞ்சம் மறந்திடுமோ ஐயா
தங்கள் ஆத்ம சக்தி எங்களை வழி நடத்தும் ஐயா
உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருதங்குளம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(6791)



## வீரவேங்கை அன்ரன்
(தியாகராஜா மன்மதராஜா)

பிறப்பு — வீரச்சாவு
12-08-1967 — 09-12-1987

ஆண்டு ஆறு ஆனதைய்யா
ஆனால் ஆறவில்லை எம் நெஞ்சமைய்யா
விடுதலைக்காய் நீ சென்றிட்டாய்
ஆனால் உன் நினைவு நீங்கவில்லை ஐயா.

மன்மதராஜா வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(6775)

உன் நினைவால் துயருறும்
பெற்றோர், அண்ணன்மார்,
அக்காமார், தம்பி, தங்கை,
அண்ணி, அத்தான்மார்,
பெறாமக்கள், மருமக்கள்.

## 1-ம்ஆண்டுநினைவஞ்சலி



முன்னை நாள் ஆசிரியப் பெருந்தகை, வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆதீன மகாசபைத் தலைவர், அறங்காவலர், கூட்டுறவாளர், விவசாயப் பிரியர், சமாதான நீதவான்.

திருவாளர் அமரர்

### துரையப்பாச்செட்டியார் சீனிவாசகம்

மலர்வு: 21-5-1907 — உதிர்வு: 5-12-1992

திதி:- 9-12-1993

வெங்கடவன் திருத்தலத்தில் விழுமிய நற்றொன்றும்
வைத்தீஸ்வரக் கலைச்சேயை வளர்த்தபெருஞ்சிறப்பும்
ஈழநாடு நாளிதழில் இருபதாண்டுச் சேவையும்
இசைவான கூட்டுறவில் ஏற்றமிகு பெரும்பணியும்
எண்பத்தைந்தாண்டு இனிதுபட ஆற்றிய
எங்கள் தலைவர் இன்சொல்லசர் சீனி ஐயா
இறவாவரம் பெற்று இன்றுடன் ஓராண்டு
மறவோம் உமையென்றும் வாழிநீ! நீடுவாழி!

134, கன்னாதிட்டிறோட்,
யாழ்ப்பாணம்.
09-12.1993 (6804)

மனைவி, உற்றார்,
உறவினர்.

## தேவசாந்தி சங்கரப்பிள்ளை (சாந்தி)

மலர்வு — அழிப்பு
02 02-1969 — 09-12-1989

முந்தித் தவமிருந்து முந்நூறு நாட்சுமந்து
ஏந்தி வளர்த்த ''தேவசாந்தி'' குலவிளக்கே
அழகான மதிவதனம் அன்பான உன்செயல்கள்
பழகிப் பதிந்தெங்கள் இல்லம் நிறைந்ததம்மா
உன்பாச நினைவுகளை ஊரறியச் சுமந்தின்று
பொன்னான நாலாண்டு மின்னாக மறைந்ததம்மா
கண்ணணைய சாந்தியுந்தன் கள்ளமற்றஉள்ளமெமைக்
கொள்ளை கொண்டு இதயத்தைஇடியாய்இடிக்குதம்மா
நெஞ்சத்து நினைவலையில் நீ நிறைந்து நிற்கின்றாய்
நீண்டதுயர் ஆறவில்லை உன் நினைவும் மாறவில்லை
இதயத்துள் ஒளியாகி அணையாது ஒளிர்கின்றாய்
எமதிடரைக் கரும்பாக்கி மகிழ்வென்றும் தந்திடுவாய்
மனவுணர்வைக் கல்லாக்கி மலைபோன்ற கவலைகளை
மௌனமாய்ச் சமாளிப்போம் சாந்தி! நீ சாந்திபெறு

உற்றார், உறவினர்
கைதடி மேற்கு. (சி-8067) குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்...
1993-12-09

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை பச்சனூர்ப் பகுதியில் பேருந்தில் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப்.ரங்கன்** (பேச்சிமுத்து விமலநாதன் - கள்ளிமேடு, தம்பலகமம், திருமலை)

திருமலை பேராற்றுப் பகுதியில் எமது முகாம் ஒன்றின் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**பவான்** (— — திருமலை)

1987ஆம் ஆண்டு யாழ்-உடுவில் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**அன்ரன்** (தியாகராசா மன்மதராசா - தாவடி தெற்கு, கொக்குவில்-யாழ்)

யாழ்-கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினரின் திடீர்ச் சோதனையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் பாரத்** (நடராசா தேவராசா, பாரதி வீதி, மானிப்பாய்)

1983ஆம் ஆண்டு மட்டு ஒந்தாச்சிமடம் பகுதியில் இந்தியப்படையினர் எமது முகாமைச் சுற்றிவளைத்த போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். சிவா** (அருளம்பலம் சிவஞானம் - களுதாவளை - மட்டு)

தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் காங்கேசன்துறையைச் சேர்ந்த பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன்.

1989ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த-

**திலிப்** (கா. கருணாநிதி 40-ம் கிராமம்-அம்பாறை)

யாழ் குடாநாட்டில் பரவலாக இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளர்கள் 13 பேர்.

1990ஆம் ஆண்டு மட்டு கல்லடிப்பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட வங்கி ஊழியரான தமிழ்ப்பொதுமகன்.

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அங்காடி வியாபாரியான தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8077)

### சிந்தனைக்கு

எல்லாரும் ஏறின குதிரையில் சக்கடத்தாரும் ஏறி சறுக்கி விழுந்தாராம்

-தமிழ்ப் பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த. பெ. எண் - 05


## தனது பங்கிற்கு ரணிலும்

இனப்பிரச்சினை தீர்விற்கென சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மூன்று படி நிலைகொண்ட மூல உபாயம் ஒன்றை கைக்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார். இம் மூலோபாயம் மலேசியாவில் எழுந்த கிளர்ச்சியை பிரிட்டிஷ் அரசாங்கம்-காலனித்துவ காலத்தில் - அடக்குவதற்கு கடைப்பிடித்த வழிமுறையை முன்னுதாரணமாகக் கொள்ளப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இம் மலேசியப் பாணி அணுகுமுறையை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தற்பொழுதுதான் அறிந்து கொண்டதாகத் தெரிவித்தமை அவர் இனப்பிரச்சினை விடயத்தில் இன்னும் எவ்வளவோ தூரம் பின் நிற்பதையே காட்டுகின்றது. ஏனெனில், மலேசியாப் பாணியில், இனப்பிரச்சினையை நசுக்குவது குறித்து அவரது மாமனார் ஜே. ஆர் ஜெயவர்த்தனா காலத்திலேயே பிரஸ்தாபிக்கப்பட்டு வந்ததோடு, சிறிலங்கா இராணுவத் தளபதிகள் பலராலும் இந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதும் பிரதமர்அறியாமல்இருந்தது கவலைக்குரியது.

இவை ஒரு புறம் இருக்க, மலேசியாப் பாணியில் கிளர்ச்சியை அடக்க பிரதமர் ரணில் கண்டறிந்த மூன்று மூல உபாயங்களின் பிரகாரம் முதலாவது அரசாங்கம் பலவீனம் அடைவதை அனுமதிக்க முடியாது என்பதாகும். இரண்டாவது விடுதலைப் புலிகளின் அரசியல் தளத்தைப் பலவீனப் படுத்துதல் என்பதும், மூன்றாவது விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலமிழக்கச் செய்வது என்பதும் ஆகும்.

ஆனால், இம் மூன்று மூல உபாயங்களில் இது வரையில் சிறிலங்கா அரசாங்கம் எதைக் கைவிட்டு விட்டது? அல்லது, செயற்படுத்தாமல் பிற்போட்டது? இலங்கையில் இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக முனைப்பு பெறத் தொடங்கியதில் இருந்தே சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக பலமிழக்கச் செய்யும் முயற்சியிலேயே ஈடுபட்டு வருகின்றது. அதிலும் ஆரம்ப காலத்தில் பலமிழக்கச் செய்தல் என்பதைவிட ஒருபடி மேலாக அழித்து விடுதல் என்ற நோக்கிலேயே செயற்பட்டது.

ஆனால், சுமார் பத்து வருடங்கள் கடந்துவிட்ட பிறகும் இராணுவ ரீதியாக புலிகளைப் பலமிழக்கச்

## அரசாங்கக் கட்சியிலும் எனக்கு ஆதரவுண்டு

### -திருமதி சிறிமாவோ

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிட இருக்கும் தனக்கு அரசாங்க கட்சியில் இருந்தும், அரசுடன் இணைந்து செயற்படும் கட்சிகளில் இருந்தும் ஒத்துழைப்பு கிடைக்கும் என்று சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

லங்காதீப சிங்கள இதழின் ஞாயிறு வெளியீட்டிற்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே கவை தோல்வி அடையச் செய்து எதிர்க்கட்சிகளின் சார்பில் தாம் பெரும் வெற்றியீட்ட முடியும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார். அத்துடன் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரத்தை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தார்.

## 10 கொள்கலன் பாலுணவு இறக்குமதிக்குத் தடை

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் 'நெஸ்லேலங்கா லிமிட்டெட்' என்ற கம்பனி இறக்குமதி செய்த பாலுணவுப் பொருள்கள் அடங்கிய பத்து கொள்கலன்கள் சுங்கப்பகுதியினரால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பாலுணவு பொருள்கள் அணுக்கதிர் வீச்சிற்கு உட்பட்டிருந்தமையால் இவற்றை நாட்டிற்குள் எடுத்து செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. இந்த 'கொள்கலன்கள் போலந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. செர்னோபில் அணுஆலை விபத்தினால் ஏற்பட்ட கதிர் வீச்சிற்கு இலக்காகி போலந்தும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நெஸ்லே லிமிட்டெட்டின் முகாமைப் பணிப்பாளருக்கே இந்த கொள்கலன்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. சுமார் 97 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த பாலுணவு பொருள்கள் துறைமுகத்திலிருந்து அகற்றப்படும் வரை அவை மூடி அடைத்து வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## விவசாயிகள் ஒய்வூதியம் வயதெல்லை குறைப்பு

(கொழும்புத்துறை)

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் விவசாயிகளின் வயதெல்லை குறைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் 18 வயதில் இருந்து 59 வயது வரையான விவசாயிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தனர்.

ஆனால் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் 50 வயதிற்கு மேற்பட்டோர் இணைத்துக்கொள்ளப் படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கமத்தொழில் காப்புறுதிச் சபையின் தலைமையகத்திலிருந்து யாழ் மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருப இலக்கம் 272 இல் இது பற்றி விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடும் காணியும் வேண்டும்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வாழும் வீடுகளையும், அவர்கள் பயிர் செய்யும் சிறு காணித் துண்டுகளையும்தான் நாம்கேட்கின்றோம். இவ்வாறு கேட்பது எவ்விதம் தவறானதாகும் என்று இ. தொ. காவின்

வேலை நாள் குறைக்கப்பட்டு தொழிலாளர்கள் பஞ்சத்தில் வாடும் நிலை தோன்றியுள்ளது. மலையக வாலிபர்கள் தொழில் தேடி கொழும்புக்கு வந்தாலும் அடையாள அட்டை இல்லை என்று கைது செய்யப்படுகிறார்கள். அடையாள அட்டை இருந்தாலும்

# துட்டகெமுனு, பராக்கிரமபாகு சிங்களவரிடம் இன்று இல்லையே!

### - ஹேமகுமார நாணயக்கார ஆதங்கம்

(கொழும்பு)

யுத்தத்தை நடத்துவதற்கு இன்று எம்மிடையே துட்டகெமுனுவும் இல்லை. வறுமையை விரட்டுவதற்கு இன்று எம்மிடையே பராக்கிரமபாகுவும் இல்லை. இவ்வாறு அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சுதந்திரக் கட்சியை சேர்ந்த ஹேமகுமார நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், உல்லா சப்பயணத் துறை, புடைவைத் தொழில் மற்றும் இது போன்ற துறைகளுக்கே அரசாங்கம் மானியங்கள் வழங்கி ஊக்கம் அளிக்கப்படும் அதே சமயம் விவசாயத்துறைக்கான சலுகைகள் அகற்றப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

மலையகத்தில் நிலங்களை விலை கொடுத்து வாங்குவதன் மூலம் சிங்களவர்களை அப்பகுதியிலிருந்து விரட்ட இ.தொ.காவும், தொண்டமானும் திட்டமிட்டு செயற்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டிப் பேசினார்.

அத்துடன் மத்திய அரசு என்ற சொற்பதப் பிரயோகம் தவறானது என்றும், இதனைப் பயன்படுத்துவது தவறான அர்த்தங்கள் ஏற்பட இடமுண்டு என்றும் தெரிவித்தார்.

மத்திய அரசு என்றும், மாகாண அரசுகள் என்றும் அழைப்பது நாட்டில் பல அரசுகள் இருக்கின்றன என்ற மயக்க நிலையை ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## நவம். மாத நிவாரணம் விரைவில் விநியோகம்

(நமது நிருபர்)

நவம்பர் இறுதி இரு வாரங்களுக்குமான இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரண விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இவ் விநியோகத்திற்கான வழங்கல் கட்டளைகளை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்கும் பணியை செயலக புனர்வாழ்வு பிரிவு ஆரம்பித்துள்ளது.

இம்முறை அரிசி, சீனி, மைசூர் பருப்பு, மீன்ரின், தேயிலை ஆகியன நிவாரணமாக வழங்கப்படவுள்ளன.

(ச, பா)

## தும்புத் தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை

கிராமங்கள் தோறும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை தெரிவு செய்து கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தினூடாகபல் வேறு உதவிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கி வருகிறது.

இதன் அடிப்படையில் தும்புத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் நுணாவில் மத்தி கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்களை தெரிவு செய்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினர் தலா 4750 /- வீதம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தொழில் நுட்பக்கல்வி போதிக்க ஆசிரியர்கள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்கடந்த பதினைந்து வருடங்களாக தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாக தெரிய வந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் 84 தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருக்கின்றபோதிலும் இது நிரப்பப்படாமல் இருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மேற்படி பதவிகளுக்கென 32 பேருக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கப் பெற்றிருந்தபோதிலும் போக்குவரத்து சிரின்மையால் நேர்முகப்பரீட்சை நடைபெறவில்லை.

இது தொடர்பாக யாழ் கல்விப் பணிப்பாளர் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் முறையிட்டும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ச)

## போக்குவரத்துச்சபை ஊழியரின் சேமலாபநிதியில் மோசடி

மூப்பதாயிரம் ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியைக் கொடுப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபையிடம் பணம் இல்லை என்று உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்

தற்போது மக்கள் மயமாக்கப்பட்டுள்ள போக்குவரத்து சபையின் மூன்று பில்லியன் ரூபா பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருப்பதாக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் ஏ. ஆர். எம்.ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

எனினும் போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கு அது மக்கள் மயமாக்கப்பட்ட 1990லேயே இந்த சேமலாப நிதிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் இதுவரை இதில் ஒரு சத மேனும் கொடுக்கப்பட

## விமானக்குண்டுவீச்சுகளுக்கு மருந்து கலவையாளர்கள் கண்டனம்

''யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சிஅரசினர்வைத்தியசாலை, முள்ளியவளை அரசினர் வைத்தியசாலை ஆகியனவற்

மையாகக் கண்டித்துள்ளது. சர்வதேச சமூகம் வைத்தியசாலைகள் மீது நடாத்தப்படும் இத்தாக்குதல்களை கண்டிக்க வேண்டும்''

இவை ஒரு புறம் இருக்க, மலேசியாப் பாணியில் கிளர்ச்சியை அடக்க பிரதமர் ரணில் கண்டறிந்த மூன்று மூல உபாயங்களின் பிரகாரம் முதலாவது அரசாங்கம் பலவீனம் அடைவதை அனுமதிக்க முடியாது என்பதாகும். இரண்டாவது விடுதலைப் புலிகளின் அரசியல் தளத்தைப் பலவீனப் படுத்துதல் என்பதும், மூன்றாவது விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலமிழக்கச் செய்வது என்பதும் ஆகும்.

ஆனால், இம் மூன்று மூல உபாயங்களில் இதுவரையில் சிறிலங்கா அரசாங்கம் எதைக் கைவிட்டு விட்டடது? அல்லது, செயற்படுத்தாமல் பிற்போட்டது? இலங்கையில் இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக முனைப்பு பெறத் தொடங்கியதில் இருந்தே சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக பலமிழக்கச் செய்யும் முயற்சியிலேயே ஈடுபட்டு வருகின்றது. அதிலும் ஆரம்ப காலத்தில் பலமிழக்கச் செய்தல் என்பதைவிட ஒருபடி மேலாக அழித்து விடுதல் என்ற நோக்கிலேயே செயற்பட்டது.

ஆனால், சுமார் பத்து வருடங்கள் கடந்துவிட்ட பிறகும் இராணுவ ரீதியாக புலிகளைப் பலமிழக்கச் செய்ய முடியவில்லை. மாறாக, தோல்வி காணும் இராணுவத்தின் தளபதியாக நான் இருக்க விரும்பவில்லை என இராணுவத்தின் தலையில் பழியைப் போட்டுவிட்டு, இராணுவத் தளபதி பதவி விலகிச் செல்லும் நிலையே உருவாகியுள்ளது. இந்நிலையில், ரணிலின் திட்டமானது இராணுவத்திற்கு தன்பங்கிற்கும் இழப்பை ஏற்படுத்த அவர் தயாராகி விட்டதையே காட்டுகின்றது.

அடுத்ததாக, விடுதலைப்புலிகளின்அரசியல்தளத்தை அழித்தலென்பதும், புதிதான ஒரு முயற்சியல்ல. இதற்கென, சிறிலங்கா அரசாங்கமும் சரி, இந்திய அரசாங்கமும் சரி தம்மால் ஆன முயற்சிகளை கடந்த காலத்தில் மேற்கொள்ளத் தவறவில்லை. இதற்காக இவர்கள் தமிழ்க்குழுக்களையும், தமது இராணுவங்களையும் பயன்படுத்தியும் தோல்வியே கண்டனர். இனிமேலும் எவர் முயற்சிப்பினும் தோல்வியே காண்பார்கள்.

ஏனெனில், புலிகளின் அரசியற் தளம் என்பது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையுடனும், பாதுகாப்புடனும் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையுடன் தொடர்புடையது. இந் நிலையில், இதனை சிதைப்பதோ அன்றி அழிப்பதோ, என்பது மேற்கொள்ளப்படக் கூடியதல்ல. விடுதலைப் புலிகளின் அரசியல் தளம் பலமானதாகவும், தார்மீக வலுக் கொண்டதாகவும் இருந்தமையே எவ்வளவோ இன்னல்கள் மத்தியிலும் தமிழீழ போராட்டமும், விடுதலைப் புலிகளும் முன்னோக்கிச் செல்லக் காரணமாக இருந்தது. இந்நிலையில் புலிகளின் அரசியல்தளத்தைஅழித்தலென்பது தமிழர் தேசியத்தை அழிக்கும் முயற்சியாகவே இருக்கும்.

தமிழரின் போராட்டம் நியாய பூர்வமானதும், தார்மீகபலம் கொண்டது என்பதினால் அதனை எதிர்க்கும் சிறிலங்கா அரசாங்கத்தை பலவீனமடையாமல் பாதுகாப்பதுஎன்பது அத்துணை சுலபமானதல்ல. தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்காத வரை, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்படும் வரை சிறிலங்கா அரசாங்கம் பலவீனப்பட்டுக் கொண்டே போகும். அதாவது, இராணுவத் தோல்விகளும், பொருளாதார நெருக்கடிகளும் சிங்கள அரசைப் பலவீனப் படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

இந்த வகையில் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் 'மலேசியப் பாணி'யில் வெற்றி பெறுவதென்பது பகற்கனவு போன்றதே. இது எந்தவித பயனையும் கொடுத்து விடப் போவதுமில்லை. தனது பங்கிற்கு ரணிலும்முயற்சிக்கின்றார். முயற்சித்துப் பார்க்கட்டும் என்று விட்டுவிடுவதைத் தவிர வேறு வழியில்லை.

---

...நியத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் விவசாயிகளின் வயதெல்லை குறைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் 18 வயதில் இருந்து 59 வயது வரையான விவசாயிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தனர்.

ஆனால் எதிர்வரும் டிசம் ... ளப் படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கமத்தொழில் காப்புறுதிச் சபையின் தலைமையகத்திலிருந்து யாழ் மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருப இலக்கம் 272 இல் இது பற்றி விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடும் காணியும் வேண்டும்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வாழும் வீடுகளையும், அவர்கள் பயிர் செய்யும் சிறு காணித் துண்டுகளையும்தான்நாம்கேட்கின்றோம். இவ்வாறு கேட்பது எவ்விதம் தவறானதாகும் என்று இ.தொ.கா வின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான டி.வி. சென்னன் பாராளுமன்றத்தில் பேசும்போது கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் பேசுகையில், இன்று தோட்டங்களில் வேலை நாள் குறைக்கப்பட்டு தொழிலாளர்கள் பஞ்சத்தில் வாடும் நிலை தோன்றியுள்ளது. மலையக வாலிபர்கள் தொழில் தேடி கொழும்புக்கு வந்தாலும் அடையாள அட்டை இல்லை என்று கைது செய்யப்படுகிறார்கள். அடையாள அட்டை இருந்தாலும் கைது செய்வதிலிருந்து தப்ப முடியாதுள்ளது. இந்த நிலையில்அவர்களுக்குபயிர்செய்யும் சிறு துண்டுக் காணியையாவது வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

---

யாழ் மாவட்டத்தில் 84 தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருக்கின்றபோதிலும் இது நிரப்பப்படாமல் இருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மேற்படி பதவிகளுக்கென 32 பேருக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கப் பெற்றிருந்தபோதிலும் போக்குவரத்து சீரின்மையால் நேர்முகப்பரீட்சை நடைபெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ச)

## போக்குவரத்துச்சபை ஊழியரின் சேமலாபநிதியில் மோசடி

முப்பதாயிரம் ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியைக் கொடுப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபையிடம் பணம் இல்லை என்று உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்

தற்போது மக்கள் மயமாக்கப்பட்டுள்ள போக்குவரத்து சபையின் மூன்று பில்லியன் ரூபா பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருப்பதாக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் ஏ. ஆர். எம்.ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

எனினும் போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கு அது மக்கள் மயமாக்கப்பட்ட 1990லேயே இந்த சேமலாப நிதிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் இதுவரை இதில் ஒரு சதமேனும் கொடுக்கப்படவில்லை எனவும் இதுதொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் கே. எச் ஜே. விஜயதாசாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

... 4750 / - வீதம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## விமானக்குண்டுவீச்சுகளுக்கு மருந்து கலவையாளர்கள் கண்டனம்

''யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சிஅரசினர்வைத்தியசாலை, முள்ளியவளை அரசினர் வைத்தியசாலை ஆகியனவற்றில் சிறிலங்கா அரசின் விமானப் படையினர் அண்மையில் மேற்கொண்ட கண்மூடித்தனமான, மிலேச்சத்தனமான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை அரசாங்க மருந்து கலவையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. சர்வதேச சமூகம் வைத்தியசாலைகள் மீது நடாத்தப்படும் இத்தாக்குதல்களை கண்டிக்க வேண்டும்''

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானம் ஒன்று அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ் கிளையின் 20 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

---

# தமிழ்நாட்டில் துப்பாக்கி கலாசாரம்; கோபாலசாமி அடித்தளம் இடுகிறார்

### கருணாநிதி குற்றச்சாட்டு

தமிழ்நாட்டில் துப்பாக்கி கலாசாரம் தோன்றுவதற்கான அடிப்படை வேலைகளை வை. கோபாலசாமியும் அவரது குழுவினரும் மேற்கொண்டு வருவதாக தி.மு.க தலைவர் மு. கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சியில் கடந்த வியாழனன்று செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கருணாநிதி மேலும் கூறுகையில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தி.மு.கவின் பொறுப்புகளைக் கைப்பற்ற கோபாலசாமி குழுவினர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், தமிழகத்தில் துப்பாக்கிக் கலாசாரம் வளர்ச்சி பெறுவதற்கான சூழலை உருவாக்குவதற்காகவே வன்செயல் கலாசாரத்தை அவர் அறிமுகப்படுத்துகிறார் என்றும்தெரிவித்தார்

அத்துடன் விடுதலைப் புலிகளுக்கிடையிலோ அல்லது ஏனைய குழுக்களுக்கு இடையிலோ உள்ள முரண்பாடுகள் பற்றிக் கருத்து தெரிவிப்பதை தி.மு.க. தவிர்த்துக் கொள்கின்றது. ஆனால் புலிகளுக்கு ஆதரவான பத்திரிகைகள் தி.மு.கவின் முரண்பாடுகளை பயன்படுத்தி தலைமைப்பீட மோதலில் பக்கச் சார்பாக செயற்படுகின்றன என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## ஒப்பந்தத்தின் நம்பகத்தை இஸ்ரேல் பேணவேண்டும்

### பாலஸ்தீனிய பேச்சாளர்

(டுனிஸ்)

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் இடையேயான உடன்படிக்கையின் நம்பகத் தன்மையை பேணுவதற்காக காஸா நிலப்பகுதியிலிருந்தும் ஜெரிக்கோவிலிருந்தும் இஸ்ரேலிய துருப்புகள் மீளப்பெறப்படுவதற்காக விதிக்கப்பட்ட காலக்கெடுவை மதித்து நடந்திடவேண்டும் என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் பிரதம பேச்சாளர் திருமதி கனொன் அஷ்ராவி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பகுதிகளில் அதிகரித்து வரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இதுவே வழியாகும் எனவும் குறிப்பிட்டார்.

## இடைக்கால நிர்வாகம் தெ.ஆபிரிக்காவில் பொறுப்பேற்பு

(ஜோகான்ஸ்பர்க்)

தென் ஆபிரிக்காவில் பல நிறத்தவர்களும் அங்கம்வகிக்கும் இடைக்கால நிர்வாக மன்றம்கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. கடந்த 340 ஆண்டுகளுக்கும் மேலாக அந்நாட்டில் நிலவிய வெள்ளைய இனத்தவரின் ஏகபோகஆட்சியை முடிவுக்கு கொண்டுவரும் முதல் நடவடிக்கையாக இது அமைந்துள்ளது. ஆயினும் அதிகார மாற்றம் தொடர்பாகஅதிபர் எவ். டபிள்யூ டி கிளார்க்கிற்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவிற்கும் இடையே பகிரங்கமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

## ஓடும் ரயிலில் துப்பாக்கிச் சூடு

நியூயோர்க் நகரில் ஓடும் ரயிலில் பயணம்செய்த அடையாளம் தெரியாத ஒருவர் தம்மிடமிருந்த 9 எம். எம். பிஸ்டலால் கண்மூடித்தனமாக சுட்டதில் பலர் காயமடைந்தனர். நகரப் பொலிசார் இதுபற்றி கருத்து வெளியிடுகையில் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்த இவர் பின்னர் சந்து ஒன்றின் வழியாகக் கடந்து தப்பிச்சென்றுவிட்டதாகக் கூறினர்.

## ராஜீவ் கொலை வழக்கு பூர்வாங்க விசாரணை முடிவு

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் சென்னையிலுள்ள விசேட நீதிமன்றத்தில் புதனன்று முடிவடைந்தன. இவ்வழக்கில் முக்கிய எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முருகன் குற்றச்சாட்டுக்களையிட்டு தான் குற்றவாளியா சுற்றவாளியா என்பதைத் தெரிவிக்க மறுத்துள்ள நிலையில் பூர்வாங்க விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

எதிரிக்கு என அமைக்கப்பட்டிருந்த குற்றவாளிக் கூண்டில் தனியாக நின்றுகொண்டிருந்த முருகன் அவர்மீதான குற்றச்சாட்டுகள் வாசிக்கப்பட்டபின்னர் அவர் குற்றவாளியா நிரபராதியா என கேட்கப்பட்டபோது முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு பதிலளிக்க மறுத்துவிட்டார்.

நீதிமன்ற எழுது வினைஞர் இதே கேள்வியை திரும்பத் திரும்ப கேட்டபோதிலும் தனது இரு கைகளையும் முகத்திலிருந்து எடுக்காமல் தொடர்ந்தும் மௌனம் சாதித்தார். எனினும் நீதிமன்ற ஊழியர் ஒருவரால் கையளிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையையும் குற்றப் பத்திரிகையையும் அவர் பெற்றுக் கொண்டார்.

ராஜீவ்காந்தி கொலையை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட விஷேச நீதி மன்றத்தில் இரு அமர்வுகள் புதனன்று நடைபெற்றன. முருகனால் கோரப்பட்டதையடுத்து அவருக்கென பிரத்தியேகமாக ஓர் அமர்வு இடம் பெற்றது. சாந்தன், ரவிச்சந்திரன், சுரேந்திரன் ஆகியோருக்காக மற்ற அமர்வு இடம் பெற்றது. சுகவீனம் காரணமாக நவம்பர் 25 இல் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காத சாந்தன், ரவிச்சந்திரன், சுரேந்திரன் மற்றும் இரும்பொறை ஆகியோர் விசாரணைகளுக்கு சமுகமளித்திருந்தனர். இவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்டதையடுத்துஅவற்றை இவர்கள் மறுத்தார்கள். இதனையடுத்து இன்றுவரை விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.

கடந்த மே மாதத்தில் இந்த விசாரணைகள் ஆரம்பமான காலம் முதல் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்து வந்த முருகன் கடைசி நேரத்தில் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்படுவதை எவரும் எதிர்பார்க்கவில்லை.

எதிரி ஒருவருக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களையிட்டு அவர் மௌனம் சாதிப்பது அவர் 'குற்றவாளியல்ல' எனக் கூறுவதாகவே சட்டத்தின் முன் கருதப்படமுடியும் என வழக்குத் தொடுனர் தரப்பு சட்டத்தரணி விளக்கினார் விசாரணைகள் ஜனவரி நடுப்பகுதியிலிருந்து ஆரம்பமாகி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மூடிய அறைக்குள் இந்த விசாரணைகள் நடைபெறவுள்ளன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 08- 12 -93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11632

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-0375, 42-9326, 24-9938, 26-6026, 40-9188, 27-7542, 28-2049, 26 2391, 24-5454, 24 5119, 26-2941, 26-2327, 24-7084, 24-5942, 26-9495, 24-4238, 24-4361, 24-5707, 41-9876, 26-8878.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-8444, 24-3063, 27-9771, 26-6505, 26-3528.



### யாழ். அடைக்கல அன்னை பங்கு மக்களின்
## கிறிஸ்மஸ் விற்பனை

ஏழைகள், அநாதைகள், பாதிக்கப்பட்டோர் அனைவருக்கும் உதவும் நோக்குடன் நடாத்தப்படும் கிறிஸ்மஸ் விற்பனையும் நிகழ்ச்சிகளும்

**காலம்: 11 - 12 - 1993, 12-12-1993**

**நேரம்: மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 7.00 மணி வரை.**

**இடம்: "ஜெரோ" மண்டபம்.**

வாருங்கள், கண்டுகளித்து பெற்று மகிழுங்கள், மகிழ்ச்சியுடன் பகிர்ந்து வாழ அன்புடன் அழைக்கிறோம்.

**பங்குத் தந்தை**

(6822) யாழ். அடைக்கல அன்னை ஆலயம்


# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் யாழ். இந்துக்கல்லூரி முன்னணியில்!

கபொத உயர்தரப் பரீட்சை (1992) ற்கான பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின. இதில் யாழ். இந்துக் கல்லூரி மாவட்ட மட்டத்தில் கணிதம் மற்றும் உயிரியல் கற்கை நெறிகளில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிடைத்த தகவல்களின்படி யாழ் இந்துக் கல்லூரியில் மூவரும், கொக்குவில் இந்துக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் தலா ஒருமாணவரும் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்றுள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரி கணித பிரிவில் சி. சுஜிதரன் நான்கு அதிவிசேட சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலாமிடத்தை பெற்றுள்ளார் பி. விசாகன் என்பவரும் நான்கு பாடங்களிலும் விசேட சித்திபெற்றவராவார். கொக்குவில்இந்துக் கல்லூரி மாணவரான செல்லையா சிவானந்தன் கணித பிரிவில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்று மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

உயிரியல் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி மாணவனான அ. மீனாட்சி சுந்தரம் மாவட்டமட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் யாழ். இந்துக் கல்லூரியை சேர்ந்த சி. சண்முகதாஸ் ஹாட்லிக் கல்லூரியை சேர்ந்த ஜெகதீசன் ஜெயச்செல்வன் ஆகியோரே வர்த்தக பிரிவில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்றவர்களாவர்.

இதேவேளை இம்முறை வெளிவந்த க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளுடன் பரீட்சார்த்திகள்தேசிய மாவட்ட நிலைகளில் பெற்ற புள்ளிகளும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இத் தகுதிநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்.இந்துக் கல்லூரி

கணிதம்

4 ஏ - 02; 3 ஏ, பி - 03; 2 ஏ, 2பி-06; ஏ, 3 பி - 04; ஏ, 2பி, சி-03; 2 ஏ, பி, சி-02;

உயிரியல்

3ஏ, பி-01; 2ஏ, 2பி-01; 2ஏ, பி, சி-01; ஏ, 3பி-02; ஏ, 2பி, சி-01; ஏ, பி, 2சி-01.

வர்த்தகம்

4ஏ-01; 2ஏ, பி, சி-01: ஏ, 3பி-01; ஏ, 2பி, சி-02.

கலை

3சி, எஸ்-01

### யாழ். இந்து மகளிர்

உயிரியல்

ஏ, பி, 2சி-01; ஏ, பி, 2 எஸ்-02; ஏ, 3சி-01; பி, 3சி-04; 2பி, 2சி-04.

கணிதம்

ஏ, 3பி-01; 4பி-01; 3பி, சி-01.

வர்த்தகம்

3ஏ, பி-01; ஏ, 2பி, சி-03

கலை

2ஏ, பி, சி-09; ஏ, 2பி-10.

### யாழ் மத்தியகல்லூரி

கணிதம்

2ஏ, 2பி-01; 2பி, 2சி-01; பி, 3சி-01; 2பி, சி, எஸ்-01; பி, 2எஸ்-03

உயிரியல்

ஏ, 2பி, சி-01; 3பி, சி-01; 2பி, 2சி-01; பி, 3சி-01.

வர்த்தகம்

ஏ, 3பி-01; ஏ, 2பி, சி-01; ஏ, பி, 2சி-01.

கலை

3பி, சி-01

### கனகரட்ணம் ம.ம.வி.

உயிரியல்

பி. 3சி-01.

வர்த்தகம்

ஏ, 2பி, சி-01; 2ஏ, சி, எஸ்-01; ஏ, 2சி, எஸ்-01.

கலை

ஏ, 3சி-01; பி, 3சி-01.

### சுண்டிக்குளி ம. க.

கணிதம்

2ஏ, பி, சி-01; ஏ, 2பி, சி-01

உயிரியல்

2ஏ, 2பி -01; ஏ, 2பி, சி-02; 2பி, 2சி-03.

வர்த்தகம்

2ஏ, பி, சி-01; ஏ, 2பி,சி-01.

கலை

2ஏ, பி, சி-01; ஏ, 3பி-01

### சென் ஜோன்ஸ்

கணிதம்

3ஏ, பி-01; 3ஏ, சி-01; 2 ஏ, பி, சி-01; ஏ, 3பி-01.

உயிரியல்

3ஏ, பி-03; 2ஏ, 2பி-01; 2ஏ, பி, சி-01

வர்த்தகம்

ஏ, 2பி, சி-02

### சென். பற்றிக்ஸ்

கணிதம்

3ஏ, பி- 01; 2ஏ, 2சி-01.

உயிரியல்

3பி, சி- 03

வர்த்தகம்

2ஏ, பி, சி-01; 2ஏ, 2சி-02

### திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்)

உயிரியல்

ஏ, 2பி, சி- 01; ஏ, பி, 2சி -01; 2பி, சி, எஸ் -01.

வர்த்தகம்

3ஏ, பி -01; பி, 3சி- 03

### வேம்படி மகளிர் கல்லூரி

கணிதம்

2ஏ, 2பி -01; ஏ 2பி, சி -01; 2ஏ, 2சி-01; பி, 3சி-02

உயிரியல்

3ஏ, பி -01; ஏ, 2பி, சி-04

வர்த்தகம்

3ஏ, பி -01; 3ஏ, சி -02; ஏ, 3பி -01; ஏ, 2பி, சி -02; ஏ, பி, 2சி -02; ஏ 3சி -01; 3பி, சி -02.

கலை

ஏ, 2பி, சி-01; ஏ, 3சி -02; 3பி, எஸ் -01; பி, 3சி -04.

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

கணிதம்

2ஏ, 2பி, -01; 2ஏ, பி, சி -01; ஏ, பி, 2சி -02.

உயிரியல்

3பி, சி -01; 2பி, சி, எஸ் -01; பி,3சி-01; பி, சி, 2எஸ்


## முக்கிய அறிவித்தல்

சர்வதேச லயன்ஸ் கழகத்துக்குச் சொந்தமான புற்றுநோய் நிதிக்கான அதிர்ஷ்டலாபச்சீட்டு புத்தகங்கள் யாழ் பெரியாஸ்பத்திரிக்கும் ரட்ணம் பார்மசிக்கும் இடையில் தவறிவிட்டன. விபரம் பின்வருமாறு:-


புத்தக இலக்கம்:- 065 முதல் 080 வரை

சீட்டு இலக்கம்:- A 0641 முதல் A 0800 வரை

இச் சீட்டுக்கள் விற்பனையில் இருந்து விலக்கப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகிறோம். இவற்றை கண்டெடுத்தவர்கள் பரணி பார்மசி 456, ஆசுப்பத்திரி வீதி என்னுமிடத்தில் ஒப்படைக்கவும்.

(6819)


## 1-ம் வருட நினைவஞ்சலி



## ஈராறு திங்களிலும் மாறாத துன்பம்



# செஞ்சிலுவை அம்புலன்சில் தடைசெய்யப்பட்ட பொருள்

### ஐலண்ட் பத்திரிகை தெரிவிப்பு

வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை ஏற்றிவந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் அம்புலன்ஸ் வண்டியொன்று இராணுவத்தினரிடம் சிக்கியுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அம்புலன்சில் வந்த மூவரும் விசாரணைக்காக இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுளளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கற்பூரம், பட்டரி, சைக்கிள் உதிரிப்பாகங்கள், சேலைன் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருள்கள் இந்த அம்புலன்சில் இருந்ததாக இராணுவ வட்டாரங்கள் கூறியதாக ஐலண்ட் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

### க. பொ. த.

சார்த்திகளின் பெறுபேறுகள் உடனடியாக தபாலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். மேலும் இவற்றை வடமராட்சிக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (பா)

### பாதுகாப்பு

கான இராணுவ -கடற்படையினர் பலியானதையடுத்து தெற்கில் மக்களிடையே எழுந்த சீற்றத்தின் விளைவே சுதந்திரக் கட்சியின் இந் நடவடிக்கைக்கு காரணம் என இது குறித்து கருத்து தெரிவித்த பி பி ஸி, குறிப்பிட்டது.

சுதந்திரக் கட்சியின் முதல் பேரணி கொழும்பின் புறநகர் பகுதி ஒன்றில் அடுத்த புதன் கிழமை நடைபெறவுள்ளது. போர் அரசுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு பெரும் லாபத்தை கொடுப்பதாக சிறிமாவோ பண்டார நாயக்கா நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இலங்கையின் நீண்ட போருக்கு இதுவரை தீர்வு காணப்படாமைக்கு சிறிமாவோ பண்டார நாயக்காவும் அவரின் கட்சியும் ஓரளவு பொறுப்பென பி பி.ஸி. சுட்டிக்காட்டியது.

இதேவேளை சுதந்திரக் கட்சியின் இந்நடவடிக்கையை நவசமசமாஜக் கட்சி கண்டித்துள்ளது. அரசியல் தீர்வு என்றுவிட்டு போரை தீவிரமாக்கும் வெட்கக்கேடான செயலே இது என அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

### இரவுநேர

ஞானசீலன் (வயது 16) படுகாயமடைந்தார். இவர் யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கபபட்டுள்ளார்.

மற்றொரு எறிகணை யாழ் நகரப் பகுதியில் நாவலர் சந்திக் கருகே வீழ்ந்து வெடித்தது. இதனால் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார் மேலும் கந்தசாமி, ந. சுந்தரம் என்பவர்களது வீடுகள் சேதமடைந்தன அருகிலுள்ள வீடுகளின் யன்னல் கண்ணாடிகளும் சிதறிக்காணப்பட்டன.

மண்டைதீவுப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நள்ளிரவில் யாழ். போதனா வைத்தியசாலைப் பாதுகாப்பு வலயத்துள் எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டனர்.

மேற்படி பகுதியில் இருந்து ஏவப்பட்ட எறிகணை யாழ். போதனா வைத்தியசாலைப் பாதுகாப்புவலயப்பகுதிக்குள் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றின் மீது வீழ்ந்து வெடித்துள்ளது இதில் மார்க்கண்டு மகேஸ்வரி (வயது43) என்ற பெண்மணி படுகாயமடைந்தார். இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(பா, நி, 9,11,)


### வினாத்தாள்கள்

யாழ். கல்வித்திணைக்களம் எடுத்துவரப்பட்டன.

விமானம் மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்ட இவ் வினாத்தாள்கள் நேற்றுக்காலை கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டு யாழ். கல்வித் திணைக்களம் கொண்டுவரப்பட்டன. (பா)

(6822) யாழ். அடைக்கல அன்னை ஆலயம்

# 1-ம் வருட நினைவஞ்சலி



## அமரர் கணபதி நரசிங்கம்

மண்ணில் 26.06.1944

விண்ணில் 20.11.1992

திதி: 9-12-1993

கண்ணின் இமைபோல் காத்து வந்தீர்
கனவுதான் வாழ்க்கையென்று நிரூபித்தீர்
கண்ணிறைந்த கணவனாகி
கருணை கொண்ட தெய்வமானீர்
பாடுபட்டீர் நாம் பலனடைய
பகிர்ந்துண்ணும் வேளையது பாதியில்
பறித்தானோ பாதகனாம் காலனவன்
எங்கு பார்த்திடினும் உம் எழில் உருவம்
தோன்றுதப்பா யார் முகத்தை பார்த்திடினும்
உன் முகமே சிரிக்குதப்பா
ஏழ் பிறப்பெடுத்திடினும் எமக்கே நீர்
சொந்தமன்றோ காலத்தால் அழியாத கலங்கரை
விளக்கமன்றோ ஆண்டொன்றானதப்பா
எம் இதயமதோ ஆறவில்லை
ஓராண்டென்ன எம்காலம் உள்ளவரை
விளக்கேற்றி வணங்கிடுவோம் இருள் நீக்கி
ஒளிர்வீரே தெய்வத்தின் சிரசதுவில்
தெய்வங்கள் மோட்சமழை பொழியவென்று
வேண்டித் துதிக்கின்ற

உம் இனிய இல்லாளும் செல்வங்களும்
மற்றும் உறவினரும்,

- குடும்பத்தினர்.

புலோலி தெற்கு. (சி-8079)

# முக்கிய அறிவித்தல்

சர்வதேச லயன்ஸ் கழகத்துக்குச் சொந்தமான புற்றுநோய் நிதிக்கான அதிர்ஷ்டலாபச்சீட்டு புத்தகங்கள் யாழ் பெரியாஸ்பத்திரிக்கும் ரட்ணம் பார்மசிக்கும் இடையில் தவறிவிட்டன. விபரம் பின்வருமாறு:-

புத்தக இலக்கம்:- 065 முதல் 080 வரை
சீட்டு இலக்கம்:- A 0641 முதல் A 0800 வரை

இச் சீட்டுக்கள் விற்பனையில் இருந்து விலக்கப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகிறோம். இவற்றை கண்டெடுத்தவர்கள் பரணி பார்மசி 456, ஆசுப்பத்திரி வீதி என்னுமிடத்தில் ஒப்படைக்கவும்.

(6819)

# ஈராறு திங்களிலும் மாறாத துன்பம்



மனிதனாக 1937-01-7

தெய்வமாக 1992-11-20

## செல்லையா நடராசா

திதி: 1993-12-09

ஈராறு திங்கள்கள் இங்கு
நீங்கள் இல்லை யென
ஓலமிட்டு அழுகின்றோம் உங்கள்
காதில் விழவில்லையோ!
விதியோ வருத்தமோ என
விளங்காமல் துடிக்கின்றோம்
அப்பாவே செப்பாமல்
சென்று விட்டீர்கள்
சிவன் கழல் சேரப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி
பிள்ளைகள்.

குமாரகோல் வீதி,
காங்கேசன்துறை.

(6816)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை துரைராசா

(வேம்படிச்சந்தி தேநீர்ச்சாலை உரிமையாளர்)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், உரும்பராய் கிழக்கில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை துரைராசா 8-12-93-ல் காலமாகிவிட்டார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:- S. பிரபாகரன்
பெறாமகன் (ஈழநாதம்)

(சி/8081)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஏ, பி, சி-01; ஏ, 3பி-01

உயிரியல்
3ஏ, பி-03; 2ஏ, 2பி-01; 2ஏ, பி, சி-01

வர்த்தகம்
ஏ, 2பி, சி-02

### சென். பற்றிக்ஸ்

கணிதம்
3ஏ, பி-01; 2ஏ, 2சி-01.

உயிரியல்
3பி, சி-03

வர்த்தகம்
2ஏ, பி, சி-01; 2ஏ, 2சி-02

### திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்)

உயிரியல்
ஏ, 2பி, சி-01; ஏ, பி, 2சி -01; 2பி, சி, எஸ் -01.

வர்த்தகம்
3ஏ, பி -01; பி, 3சி-03

### வேம்படி மகளிர் கல்லூரி

கணிதம்
2ஏ, 2பி -01; ஏ 2பி, சி -01; 2ஏ, 2சி-01; பி, 3சி-02

உயிரியல்
3ஏ, பி -01; ஏ, 2பி, சி-04 ஏ, பி, சி, எஸ் -01; 3பி, சி 03; 2பி, 2சி -02.

வர்த்தகம்
2ஏ, 2பி - 01; 2ஏ, பி, சி -02; ஏ, 3பி -01.

கலை
3பி, சி -01; ஏ, 3சி -02; 2பி, 2சி -01; பி, 3சி -01.

### மானிப்பாய் இந்து

கணிதம்
ஏ, 2பி, சி-02; பி, 2சி, எஸ் -03.

உயிரியல்
2ஏ, 2சி -01; பி, 2சி, எஸ் -01; பி, 3எஸ் -01; 3சி, எஸ் -01; சி, 3எஸ் -01.

வர்த்தகம்
2ஏ, பி, சி -01; 3பி, சி -02 2பி, 2சி -01; பி, 3சி -01.

கலை
2பி, 2சி -01; பி, 3சி -01.

### கொக்குவில் இந்து

உயிரியல்
3பி, சி -01; 2பி, சி, எஸ் -01; பி, 3சி -01; பி, 2சி, எஸ் -02

கணிதம்
4ஏ -01; 2ஏ, 2பி -01; ஏ, 2பி, சி -01; ஏ, 2பி, எஸ் -01; ஏ, பி, 2சி -02; ஏ, 2பி -01; 4பி -01; 3பி, சி -01; 2ஏ, பி, சி -01.

வர்த்தகம்
3ஏ, சி -01; 2ஏ, 2பி -01; ஏ, 2பி, சி -03; ஏ, பி, 2சி -05; 3பி, சி -05; 2பி, 2சி -01.

கலை
3ஏ, சி -01; 3பி; சி -02; 2பி, 2சி -02; 2பி, சி -01; பி, 2சி, எஸ் -01.

### யூனியன் கல்லூரி

கணிதம்
2ஏ, சி, எஸ் -01; ஏ, 2பி, சி -01; ஏ, பி, சி, எஸ் -01 2பி, 2சி -01; பி, 2சி, எஸ் -03; பி, சி, 2எஸ் -02.

உயிரியல்
ஏ, 2பி, சி -01; ஏ, 3சி -01; 2பி, 2சி -01; பி, 2சி, எஸ் -02; பி, சி, 2எஸ் -01.

பொறுப்பென பி.பி.ஸி. சுட்டிக்காட்டியது.

இதேவேளை சுதந்திரக் கட்சியின் இந்நடவடிக்கையை நவசமசமாஜக் கட்சி கண்டித்துள்ளது. அரசியல் தீர்வு என்றுவிட்டு போரை தீவிரமாக்கும் வெட்கக்கேடான செயலே இது என அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

---

வர்த்தகம்
3ஏ, பி -01; 3ஏ, சி -02; ஏ, 3பி -01; ஏ, 2பி, சி -02; ஏ, பி, 2சி -02; ஏ 3சி -01; 3பி, சி -02.

கலை
ஏ, 2பி, சி-01; ஏ. 3சி -02; 3பி, எஸ் -01; பி, 3சி -04.

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

கணிதம்
2ஏ, 2பி, -01; 2ஏ, பி, சி -01; ஏ, பி, 2சி -02.

உயிரியல்
3பி, சி -01; 2பி, சி, எஸ் -01; பி, 3சி-01; பி, சி, 2எஸ் -02

வர்த்தகம்
ஏ, 3பி -02; 2ஏ, பி, சி -02

கலை
ஏ, பி, 2சி -01; ஏ, 2பி, சி -01; 2பி, 2சி -02.

### உடுவில் ம. கல்லூரி

கணிதம்
பி, 3சி-03

உயிரியல்
ஏ, 2பி, சி-04

வர்த்தகம்
ஏ, 2பி, சி-02

கலை
ஏ, 2பி, சி-02

### சேர் வைத்திலிங்கம் ம. வி.

வாத்தகம்
2பி, 2சி-01

### வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி

வர்த்தகம்
4ஏ-01

கணிதம்
3ஏ, பி-03

### வட இந்து மகளிர்

உயிரியல்
3ஏ, பி-02

வர்த்தகம்
ஏ, பி, சி-01

கலை
ஏ, 2பி, சி-03

### பருத்தித்துறை உயர்தர பெண்கள் கல்லூரி

உயிரியல்
2ஏ, 2பி-01

கணிதம்
ஏ, பி, 2சி-03; 3பி, சி-01

வர்த்தகம்
ஏ, 2பி, சி-02

### வேலாயுதம மகா வித்தியாலயம்

கணிதம்
ஏ, 2பி, சி-01

உயிரியல்
பி, 3சி-01

வர்த்தகம்
ஏ, 2பி-01

கணைத்தாக்குதலை மேற் கொண்டனர்.

மேற்படி பகுதியில் இருந்து ஏவப்பட்ட எறிகணை யாழ். போதனா வைத்தியசாலைப் பாதுகாப்புவலயப்பகுதிக்குள் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றின் மீது வீழ்ந்து வெடித்துள்ளது இதில் மார்க்கண்டு மகேஸ்வரி (வயது43) என்ற பெண்மணி படுகாயமடைந்தார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(பா, நி, 9,11,)

---

## வினாத்தாள்கள்

யாழ். கல்வித்திணைக்களம் எடுத்துவரப்பட்டன.

விமானம் மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்ட இவ் வினாத்தாள்கள் நேற்றுக்காலை கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டு யாழ். கல்வித் திணைக்களம் கொண்டுவரப்பட்டன. (பா)

---

## போர்குறித்து

ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை முன்வைக்க இதுவே சிறந்த தருணம் என தெரிவித்த அவர்,

இவ்வாறான அரசியல் தீர்வொன்றை அரசாங்கம் முன்வைக்காத நிலையில் எதிர்க்கட்சிகள் இதனை தீர்த்து வைப்பது கடினம் என்றார்.

---

## ஜனாதிபதி

அதிகாரிகளும் கலந்து கொண்டதாகவும் தெரியவருகின்றது சிசில் வைத்தியரட்ணாவின் இராஜினாமாவை ஏற்பதா? அல்லது அவரை கட்டாய லீவில்அனுப்புவதா? என்பது தொடர்பாகவிரிவாக ஆராயப்பட்டதாக தெரியவருகின்றது.

அடுத்து இவரின் இராஜினாமாவை தொடர்ந்து இராணுவத்தில் ஏற்பட இருக்கும் தாக்கங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

## இராணுவ

தெரிவித்தது.

இதேவேளை மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா ஆளணி முதல்வராக சேவை நீடிப்பு வழங்கியது பற்றி சிசில் வைத்தியரெட்னா தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார் என்றும், பூநகரி இராணுவத்தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டு அந்த முகாமை நிர்மூலமாக்கியதற்கும் அங்கு இடம்பெற்ற பேரழிவுக்கும் தான் மாத்திரம் பொறுப்பல்ல என இராணுவத் தளபதி சிசில் வைததியரட்னா அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளார் என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.